**செய்தி வெளியீடு எண்: 278** **நாள் : 09.06.2016**

**<u>தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலை கழகம்</u>**

**<u>செய்தி வெளியீடு</u>**

எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக் கழகத்தின் கீழ் படித்துவரும் மருத்துவ பட்ட மேற்படிப்பு / பட்டய மேற்படிப்பு மாணவர்களின் தேர்வுகள் **மத்திய மருத்துவ ஆளுமை குழுமத்தின் விதிப்படி** 15/04/2016-ல் நடைபெறும் என்று அனைத்து மருத்துவ பட்ட மேற்படிப்பு / பட்டய மேற்படிப்பு மாணவர்களுக்கு அந்தந்த கல்லூரி முதல்வர்கள் மூலமாக சுற்றறிக்கை 2013 ஆம் ஆண்டு தெரிவிக்கப்பட்டது.

மத்திய மருத்துவ ஆளுமை குழுமம் கீழ்கண்ட விதிகளை பின்பற்றி மருத்துவ தேர்வு நடத்தப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

*மருத்துவ பட்ட மேற்படிப்பு நான்கு வினாத்தாள்கள் / பட்டய மேற்படிப்பு மூன்று வினாத்தாள்கள் உள்ளது. ஒவ்வொரு வினாத்தாள்களிலும் மாணவர்கள் 40% மதிப்பெண் எடுக்க வேண்டும். அனைத்து வினாத்தாள்களிலும் கூட்டு மதிப்பெண் 50% மற்றும் செய்முறை பயிற்சியில் தேர்ச்சி பெற்று இருந்தால் மட்டும் மாணவர்கள் தேர்ச்சி பெற்றவர்களாக பல்கலை கழகம் அறிவிக்க வேண்டும்.

மருத்துவ பல்கலைக்கழகம் மத்திய மருத்துவ ஆளுமை குழுமத்தின் விதிப்படி வினாத்தாள்கள் மதிப்பிடப்பட்டது. மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு இப்பல்கலை கழகம் ஒவ்வொரு வினாத்தாள்களிலும் தனியாக தோல்வியுற்றதை இரண்டாவது முறையாக மறுமதிப்பிடு செய்யப்பட்டது.

ஏப்ரல் 2016 மாதத்தில் நடத்தப்பட்ட தேர்வு முடிவுகள் 3-6-2016 அன்று, இப்பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டது. இதில் பட்ட மேற்படிப்பு 941 மாணவர்களும், பட்டய மேற்படிப்பில் 456 மாணவர்களும் தேர்வு எழுதினர். அதில் பட்ட மேற்படிப்பில் 879 மாணவர்கள் (93.4%) மற்றும் பட்டய மேற்படிப்பில் 407 மாணவர்கள் (89%) தேர்ச்சி பெற்றுள்ளனர். இந்த தேர்ச்சி விகிதமானது கடந்த மூன்று வருடங்களில் வெளியிடப்பட்ட தேர்வு முடிவினை ஒத்துள்ளது. (90 – 95%).

கடந்த நான்கு வருடங்களுக்கு முன்பாக மாணவர்கள் ஒவ்வொரு வினாத்தாள் மற்றும் செய்முறையில் தேர்வில் தனித்தனியாக (Component System) குறைந்தது 50% மதிப்பெண் எடுத்தால் மட்டும் தேர்ச்சி பெற்றவர்களாக அறிவிக்கப்பட்டனர். ஆனால் சில மாணவர்கள் நீதிமன்றத்தினை அணுகி மத்திய மருத்துவ ஆளுமை குழுமத்தின் விதிப்படி தேர்வு நடத்தப்பட வேண்டுமென்று ஆணை வாங்கி வந்ததால் இப்பல்கலை கழகம் கடந்த 2013-14 பின்பு சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கு மத்திய மருத்துவ ஆளுமை குழுமத்தில் விதிப்படி தேர்வு நடத்தப்பட்டது.

இருந்தாலும் இப்பல்கலை கழகம் எப்போதும் மருத்துவ மாணவர்களின் மீது அதிக அக்கறை கொண்டுள்ளதால், தோல்வியுற்ற மாணவர்களின் கோரிக்கைகளை இப்பல்கலை கழக ஆட்சி மன்ற கூட்டத்தில் வைத்து பரிசிலிக்கப்பட்டு அதன் முடிவினை மத்திய மருத்துவ ஆளுமை குழுமம், புதுடெல்லிக்கு அனுப்பி உரிய மேல் நடவடிக்கை எடுக்க இப்பல்கலை கழகம் முயற்சிக்கும்.

**பேராசிரியர் மரு. எஸ். புஷ்கலா, M.D.**
**பதிவாளர்.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**